25th September 1961]

Ports (Tuticorin)

* 1820-C *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to convert Tuticorin port as all weather port; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government of India have stated that the scheme has been included in the Third Five-Year Plan and a provision of Rs. 10 crores has been made for the new major ports at Tuticorin and Mangalore.

SRI N. K. PALANISAMI: எல்லாப் பருவ காலங்களிலும் உபயோகிக்கும் முறையில் என்னென்ன அபிவிருத்திகள் செய்யப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : ஒரு மேஜர் போர்ட்டாக வருவதற்கு என்னென்ன அபிவிருத்திகள் செய்யவேண்டுமோ அவை அத்தனையும் செய்யப்படும். தனிக் கேள்வி போட்டால் விவரமாக சொல்கிறேன்.

SRI K. ANBAZHAGAN : சேது கால்வாய்த் திட்டம், தூத்துக்குடித் திட்டம் இரண்டையும் இணைத்து நிறைவேற்ற வேண்டுமென்ற கருத்து ஏற்கனவே இந்த அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த கால்வாய்த் திட்டம் இதோடு சேர்த்து இணைத்து நிறைவேற்ற ஏதாவது வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON SRI P. KAKKAN : இந்தக் கால்வாய்த் திட்டம் தூத்துக்குடி திட்டத்தோடு இப்பொழுது சேர்க்கப்படவில்லை. தனியாக எடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

SRI M. S. SELVARAJAN : What are the Preliminary works carried on so far for starting the Harbour work during the Plan period, Sir ?

THE HON. SRI P. KAKKAN : We are asking the Government of India to start the work in time. On the 22nd instant, I attended the National Harbour Board meeting. The Union Minister for Transport and Communications, in his inaugural address in that meeting stated that the work will be taken up in time. So, we can fulfil our promise in that area regarding this work.

SRI K. ANBAZHAGAN : தூத்துக்குடித் துறைமுகத்தை பெரிய ஆழ்கடல் துறைமுகமாக கட்டுவதற்கு மொத்தம் எவ்வளவு செலவாகுமென்று தீர்மானித்திருக்கிறார்கள் ? இப்பொழுது ஒதுக்கியிருக்கிற 10 கோடியில் மங்களூருக்கு எவ்வளவு, தூத்துக்குடிக்கு எவ்வளவு என்று பிரித்திருக்கிறார்கள் ? எவ்வளவு தொகை ?

THE HON. SRI P. KAKKAN : 10.27 கோடி என்று நினைக்கிறேன். தூத்துக்குடிக்கு 5, மங்களூருக்கு 5.

SRI M. S. SELVARAJAN : தூத்துக்குடி துறைமுகத்தை பெரிய மீன்பிடி துறைமுகமாக விருத்தி செய்ய வேண்டுமென்ற திட்டம் இருப்பதாக அறிகிறேன். அப்படியானால், ஆல் வெதர் போர்ட்டாக டெவலப் செய்ய இருக்கிறபோது ஆழ்கடல் மீன்பிடி துறைமுகமாகவும், சேர்த்து எப்படி செய்வது என்பது இதுவரையில் பரிசீலனைக்கு வந்திருக்கிறதா ? அப்படியானால் இரண்டையும் சேர்த்து குறைந்த செலவில் கட்டலாமே என்ற ஆர்வத்தோடு தான் சொல்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : ஆழ்கடல் துறைமுகம் என்பது மீன் பிடிப்பதற்காக அல்ல. மேஜர் போர்ட்டாக வைக்க இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எல்லாக் காலத்திலும் எந்தவித இடையூறும் இன்றி கப்பல்கள் வர போக நல்ல வியாபாரம் நடத்தத் தக்க முறையில் இந்தப் போர்ட்டை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

SRI K. RAMACHANDRAN : தூத்துக்குடி துறைமுகத் திட்டம் சேது சமுத்திரத் திட்டத்தோடு முதலில் இணைக்கப்பட்டிருந்தது பின்னால் பிரிக்கப்பட்டுவிட்ட தென்று சொன்னாலும் தூத்துக்குடி போர்டின் பலன் சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் மூலம் அதிகப்படுமென்று உணர்ந்திருக்கிறார்களா ? ஆகவே அரசாங்கம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி வந்தார்களே, அது என்னவாயிற்று ? மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேது சமுத்திரத் திட்டம் சேர்த்துக் கொள்ளப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : சேது சமுத்திரத் திட்டம், தூத்துக்குடி துறைமுகத் திட்டம் இரண்டையும் எடுத்துக்கொள்ளவேண்டு மென்பது அரசாங்கத்தின் அக்கறை. இப்பொழுது சேது சமுத்திரத் திட்டத்தில் சில வேலைகள் இன்னும் பரிசீலிக்கப்பட இருக்கிறது. அதன் முடிவு தெரிந்த பிற்பாடுதான் ஒரு முடிவிற்கு வரவேண்டும். அதுவரை தூத்துக்குடி மேஜர் துறைமுகமாக வருதவற்கு தடை வேண்டாமென்று அது முதலில் எடுக்கப்பட்டிருக்கிறது.

SRI D. S. AUTHIMOOLAM : இந்த தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தின் வேலை, ப்ரிலிமினரீஸ் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ? 62 மார்ச்சுக்கு முன்னே அதற்கு வேண்டிய ஏதாவது ஒரு விழா வைக்க சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN : மூன்றாவது திட்டத்தில் சேர்த்திருக்கிறோம், உடனடியாக எடுக்க வேண்டுமென்று. அதற்கு என்னென்ன சடங்குகள் வேண்டுமோ அவை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. பூர்த்தியான பிறகு திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

SRI A. GOVINDASAMY : தூத்துக்குடி துறைமுகம் சென்னை துறைமுகம் மாதிரி இருக்குமா ? புதுச்சேரி மாதிரி கடலில் பாலம் கட்ட முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : எனக்குத் தெரிந்த வரையில் சென்னைத் துறைமுகம் மாதிரித்தான் அமையும்.

SRI K. ANBAZHAGAN : தூத்துக்குடி துறைமுகத்தை விரிவு படுத்துகிறபோது, கண்ட்லா போர்ட் போன்று, வட நாட்டுப் பகுதியில் வறியின்றி இறக்குமதிக்கு உரிமை அளித்துள்ள துறைமுகத்துக்குள்ள சலுகை இதற்கும் அளிக்கவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிதறா ? தூத்துக்குடியில் இருந்து சென்னை வரை ப்ராட் கேஜ் லைன் போடவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி ப்ராட் கேஜ் லைன் அமைக்க மத்திய அரசினரிடம் வற்புறுத்தி கேட்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : ஒரு மேஜர் துறைமுகம் வந்த பிறகு அதற்கு வேண்டிய ரெயில்வே லைன் தேவை. அதுவும் கவனிக்கப்படும். துறைமுகம் வருவதற்கு அரசாங்கம் பிரயத்தனம் எடுத்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கொண்டுவர ஏற்பாடு செய்துவிட்டது. திராவிட முன்னேற்ற கழகத்தை சேர்ந்த எதிர்கட்சி உறுப்பினர்கள், இது வராது என்று சொல்லிக்கொண் டிருந்தார்கள். வந்த பிறகு இருக்கிற வரியைப்பற்றி சொல்கிறார்கள். அதுபற்றி பின்னால்தான் முடிவு செய்யப்படும்.